பக்கங்கள்: 13

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 தை 29 செவ்வாய்க்கிழமை 13.02.2024 கதிர் 98

# 24 ஜனாதிபதி தேர்தலின் பின்னரே நிறைவேற்று அதிகார முறை ஒழிப்பு

## ஐக்கிய மக்கள் சக்தி திட்டவட்டம்

ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்தபின்னர்தான்நிறைவேற்று அதிகாரஜனாதிபதி முறைஒழிக் கப்படவேண்டும் என்று ஐக்கிய மக்கள்சக்தியின்நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட் சித்தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தி யாளர்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையானது நீக்கப்பட வேண்டும். ஆனால் அந்த முறைமையானது எதிர்வரும் ஜனாதிபதி ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை பெப்ரவரி 19 நடத்துவது என்று திடீரெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாநாடு திடீரென மாவை சேனாதிராசாவால் ஒத்தி வைக்கப்பட்டதைப் போன்றே, சிறீதரன் மற்றும் மாவை ஆகியோர் இணைந்து அந்த மாநட்டை பெப். 19 நடத்துவது என்றும் முடிவு செய்துள்ளனனர்.

கடைசியில் ஜனவரி 21 பொதுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை அப்படியே ஏற்றுக்கொண்டு–அதாவது கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவு உட்பட அனைத்துநிர்வாகத்தெரிவுகளையும் அப்படியே ஏற்றுக்கொண்டு கட்சியின் தேசிய மாநாட்டைக் கூட்டுவது என்று முடிவுசெய்யப்பட்டிருக்கின்றது. ☞ 2

## எந்தத் தேர்தல் எப்போது நடக்கும் எனத் தெரியாது

### பெரமுனவின் எம்.பி. தெரிவிப்பு

எந்தத் தேர்தல் எப்போது நடக்கும் என்பது தெரியாது என்று பொது ஜன பெரமுனவின்நாடாளுமன்றஉறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள பொது ஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 2

## டயானாவின் குடியுரிமை குறித்த மனு மீது விசாரணை ஆரம்பம்

இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவின் பிரித்தானிய குடியுரிமை தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்துச் செயற்பாட்டாளர் ஓஷல ஹேரத் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு தொடர்பில் உயர் நீதிமன்றம் விசாரணைகளைத் தொடங்கியுள்ளது.

ஓஷல ஹேரத் தாக்கல் செய்த மனு நேற்று உயர்நீதிமன்ற நீதியரசர்கள் காமினி அமரசேகர, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் ஜனக்டிசில்வாஆகியோர் முன்னிலையில் விசாரணைக்குஎடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஹபீல்பாரிஸ், இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவுக்கு சட்டப்பூர்வ இலங்கைபிரஜாவுரிமை கிடையாது எனவும், அவர் வதிவிட விசா மூலம் இலங்கையில் தங்கியிருந்தமை தெரியவந்துள்ளதாகவும் குறிப்பிட்டார். ☞ 2

## ராஜசிங்க நரேந்திர மன்னின் உருவச் சிலை நேற்று திறப்பு

கொள்ளுப்பிட்டி வாலுகாராம உட்பட பஞ்ச மகா விகாரை விகாராதிபதி விசித்ர பானக வண. மஹரகம நந்த நாயக்க தேரரின் 70ஆவது பிறந்தநாளை முன்னிட்டுகொள்ளுபிட்டி வாலுகாராமவிகாரையில் நிறுவப்பட்டுள்ளகீர்த்திசிறீ ராஜசிங்கநரேந்திரனின் உலோகச் சிலையை திரை நீக்கம் செய்யும் நிகழ்வுநேற்றுஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவின் தலைமையில் நடைபெற்றது.

கீர்த்தி சிறீ ராஜசிங்க நரேந்திரன் கண்டியை ஆண்ட நாயக்க வம்சத்தைச் சேர்ந்த இரண்டாவது மன்னன் ஆவான். தமிழ்நாட்டின் மதுரையைச் சேர்ந்த தெலுங்கு நாயக்க வம்சத்தைச் சேர்ந்தவன்.

தாய்லாந்திலுள்ள மகாசங்கத்தினர் உள்ளிட்ட தாய்லாந்து நன்கொடையாளர்களின் ஆதரவுடன் இந்த உலோகச் சிலை ☞ 2

### இலங்கைக்கு வரும்

## இந்தியச் சுற்றுலாவிகள் இனிமேல் கியூ.ஆர். மூலம் பணம் செலுத்தலாம்

இலங்கைக்கு வருகை தரும் இந்திய சுற்றுலாப்பயணிகளுக்கு டிஜிட்டல் கியூ.ஆர். (QR) குறியீடு மூலம் ஒருங்கிணைந்த கட்டண முறை அல்லது யுபிஜ (UPI) அறிமுகப் படுத்திய பின்னர் அது தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று ஜனாதிபதி ஊடகமையத்தில் இடம்பெற்றது.

என்பிசிஜ இன்டரநாஷனல் பேமென்ட்ஸ் லிமிடெட் (NPCI International payments Limited) மற்றும் இலங்கையின்லங்காபே (Lamkappay) பிரைவேட் லிமிடெட் இணைந்து செயல்படுத்தும் இந்தத் திட்டத்தை விரைவாக விரிவுபடுத்தும் நோக்கத்துடன், 10,000 வர்த்தக நிலையங்களில் இந்தக் கட்டண முறை இதனுடன் இணைந்ததாக நடைமுறைப் ☞ 2

## இந்தியர்களுக்கான கியூ.ஆர். திட்ட தொடக்க நிகழ்வில் பிரதமர் மோடி

### நிகழ்நிலை மூலம் கலந்துகொண்டார்



இலங்கை வரும் இந்தியசுற்றுலாப்பயணிகளுக்குகியூ.ஆர். குறியீடு ஊடாக ஒருங்கிணைந்த கட்டணமுறைஎனப்படும் யுபிஜ (UPI) ஊடாக பணம்செலுத்தும்முறைமையை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் நிகழ்நிலைத் தொழில்நுட்பம் மூலம் இணைந்துகொண்டார்.

நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

என்பிசிஜ இன்டரநாஷனல் ☞ 2

## பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் மாற்றுத் திட்டங்களைப் பேசத் தயார்

### அமைச்சர் பந்துல அறிவிப்பு

இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் முன்னெடுக்கப்படும்பொருளாதார வேலைத் திட்டத்தைத் தவிர்த்து வேறு மாற்று வழிகள் இருப்பின் எந்தவொருகுழுவுடனும் பேச்சு நடத்தத் தயார் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

2023 ஆம் ஆண்டு வரி விதிப்பின் மூலம் பெறப்பட்ட அரச வருமானம் 3201 பில்லியன் ரூபாய். நிவாரணங்கள், சம்பளம் மற்றும் அரச கடன்கள் ஆகியவற்றிற்காக திறைசேரியிலிருந்துசெலவிடப்பட்ட தொகை4394பில்லியன் ரூபாய். அரச செலவில் எப்பகுதி குறைக்கப்படலாம் என்பதை மாற்றுக் கருத்துள்ள குழுக்கள் மக்களுக்கு அறிவிக்க வேண்டும்.

இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வுகள் இல்லை என ஜனாதிபதி தனது சிம்மாசன உரையில் குறிப்பிட்டார். 2022 இல் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி பற்றி மக்களுக்குத் தெரியும்.

அதிலிருந்து நாட்டை மீட்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டத்தினால் இலங்கையின்பொருளாதாரம் இன்று சாதகமான நிலையை எட்டியுள்ளது. ☞ 10

## பலாலி விமானத் தள விரிவாக்கத்துக்கு 500 ஏக்கரை சுவீகரிக்கக் கடும் எதிர்ப்பு

### மக்களின் போராட்டத்தால் கைவிடப்பட்டது அளவீட்டு முயற்சி

யாழ்ப்பாணம் - வலிகாமம் வடக்கில் 500 ஏக்கர் நிலத்தைச் சுவீகரிக்க அரசு எடுத்த முயற்சி நேற்று அந்தப் பகுதிமக்களின்எதிர்ப்பையடுத்துக்கைவிடப்பட்டது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய அபிவிருத்திக்குஎன்னும் பெயரில் மேலும் 500 ஏக்கர்நிலத்தைச்சுவீகரித்துத் தருமாறு விமான போக்குவரத்து அதிகார சபை விடுத்த கோரிக்கைக்கு அமைவாகவே காணி சுவீகரிப்புக்கான முயற்சிமேற்கொள்ளப்படுகின்றது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்குத் தாம் ஏற்கனவே கடும் எதிர்ப்பை வெளியிட்டு அவசர சந்திப்புக்கு யாழ். மாவட்டச் செயலருக்கு எழுத்தில் கடிதம் வழங்கியபோதும் அவர்வாய்மூடி மௌனியாக இருக்கின்றார் என்றும் அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டினர்.

இந்நிலையில், குரும்பசிட்டி, வசாவிளான், கட்டுவன், கட்டுவன் மேற்கு, குப்பிளான் வடக்கு ☞ 10

## ஒரு வருடத்தால் பதவியை நீடிக்க ரணில் முழு முயற்சி

### ஹிருணிகா குற்றச்சாட்டு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பதவிக் காலத்தில் ஒரு நாளைக்கூட விட்டுக் கொடுக்கமாட்டார். அதே நேரம் அவர் தனது பதவிக்காலத்தைமேலும் ஒருவருடம்நீடிக்க முயற்சிக்கிறார் என்று ஐக்கிய பெண்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் ஹிருணிகாபிரேமச்சந்திர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார்.

எனக்குத் தெரிந்த ரணில் ராஜபக்ச ஜனாதிபதி அதிகாரத்தில் நீடித்திருப்பதையே விரும்புவார். அவர் ஒருநாள் கூட முன்னதாக தேர்தலை நடத்துவதற்கு விரும்பமாட்டார்.

அவருடைய தற்போதைய மனநிலையானது எப்படியாவது தான் ஜனாதிபதி ஆசனத்தில் தொடரவேண்டும் என்பதுதான். இருப்பினும் அவருக்கு மக்களின் ஆணையுடன் அப்பதவியில் நீடிப்பதற்கும்விருப்பம்உண்டு.

ஆனால், அதில் சவால்கள் காணப்படுவதால் அவர் ஒருநிமிடமேனும் அப்பதவியை கைவிட்டு ☞ 10

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இதுவரை இழுபறியில் இருந்துவந்த கட்சியின் செயலாளர் பதவியை முதல் வருடத்தில் திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவர் குகதாசன் வகிப்பது என்றும் இரண்டாவது வருடத்தை மட்டக்களப்பைச் சேர்ந்த சிறீநேசன் வகிப்பது என்றும் இணக்கம் காணப்பட்டதன் அடிப்படையில் தேசிய மாநாட்டுக்கு நாள் குறிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், இந்தப் பிரச்சினை ஒரு விதமாகப் பூசி மெழுகப்பட்டிருக்கின்றதே தவிர முழுமையாகத் தீர்க்கப்பட்டதாகத் தெரியவில்லை. காரணம், சுமந்திரன் தரப்பினரின் இணக்கமோ, உடன்பாடோ இன்றித்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது.

கட்சியின் தலைமைப் பதவிக்குப் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரனும் சுமந்திரனும் போட்டியிட்டனர். இதனால் கட்சிக்குள் இரு பெரும் அணிகள் உருவாகின. இதில் சிறீதரன் வெற்றிபெற்றார். அதன் பின்னர் கட்சியை ஒற்றுமைப்படுத்துதல் என்கிற பெயரில் கட்சி நிர்வாகிகள் தெரிவில் சுமந்திரன், சிறீதரன் ஆகிய இருவரும் இணைந்து செயற்படுவது என்று தீர்மானிக்கப்பட்டது. அதனடப்படையில் சுமந்திரன் தரப்பைச் சேர்ந்த ஒருவருக்குப் பொதுச் செயலாளர் பதவியை வழங்குவதன் மூலம் இரு தரப்பினரும் இணைந்துவிட்டனர் என்ற செய்தி கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்களுக்கு வழங்கப்படவேண்டும் என்கிற ரீதியில்தான் சுமந்திரன் தரப்பைச் சேர்ந்தவரென அடையாளப்படுத்தப்பட்ட குகதாசன் பொதுச் செயலாளர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டார். கட்சியின் மத்திய செயற்குழுவில் எல்லோரும் இணங்கித்தான் இந்த முடிவுக்கு வந்திருந்தனர்.

பின்னர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் இதனைக் குழப்பிக்கொண்டு, பொதுச் செயலாளர் தெரிவை ஏற்கமுடியாது அது மட்டக்களப்புக்குத்தான் தரப்படவேண்டும் என்று பிடிவாதம் பிடித்தனர். இதனால் ஏற்பட்ட குழப்பத்தை அடுத்து மாவையர் கட்சியின் தேசிய மாநாட்டை ஒத்தி வைத்து அறிவித்தார். இப்படி குகதாசன் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டது அவர் சுமந்திரன் அணியைச் சேர்ந்தவர் என்கிற அடையாளப்படுத்தலுடன்தான். சுமந்திரன் அவரைத் தனது அணியின் விசுவாசமான உறுப்பினராகக் கொள்ளவில்லை என்றபோதும், (அவர் நடுநிலையாகச் செயற்பட்டார் என்பதே சுமந்திரனின் கருத்து) அவரையும் உள்ளடக்கியே பொதுச் செயலாளர் பதவிக்குப் பரிந்துரைத்தார். இருப்பினும் அவரது தெரிவு சுமந்திரன் அணியின் தெரிவாகவே பார்க்கப்பட்டது.

இருப்பினும், கடந்த சில தினங்களாக நடக்கும் இந்தச் சமரச முயற்சிகள் குறித்து குகதாசன் சுமந்திரனுடன் எதுவும் பேசவில்லை. ஆளுக்கு ஒரு வருடம் என்கிற திட்டத்திற்குத் தான் இணங்கிப் போகிறார் என்பதையும்கூட அவர் சுமந்திரனுக்குத் தெரிவிக்கவும் இல்லை, சம்மதத்தைப் பெறவும் இல்லை. கட்சியின் இந்த முடிவுகள் குறித்து சுமந்திரனுடன் கட்சியிலிருந்து உத்தியோகபூர்வமாக எவரும் பேசவுமில்லை என்று உறுதிப்படுத்த முடிந்தது. சுமந்திரனாகச் சில விடயங்களை அறிந்து அழைப்பு எடுத்துக் கேட்டபோது அது பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. அதற்கும் மேலாக சமரச முயற்சிகள் குறித்து சுமந்திரனுடன் எதுவும் பேசக்கூடாது என்று குகதாசனின் கைகள் கட்டிவைக்கப்பட்டன என்றும் அறிய முடிந்தது.

வவுனியாவில் நடந்த சமரச முயற்சிகளில் சிறீநேசனுக்கு செயலாளர் பதவி வேண்டும் என்று கேட்ட கிழக்கைச் சேர்ந்தவருகளும் அவர்களால் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவர் என்று கருதப்படுபவரான சிறீதரனும் என சிறீதரன் அணியினர் பலருக்கு மத்தியில் சுமந்திரன் அணியைச் சேர்ந்த ஒரேயொரு நபராக குகதாசனை இருத்திவைத்துத்தான் தற்போதைய இணக்கப்பாட்டை எட்டியுள்ளார்கள். அதுவும் சமரச முயற்சிகள் பற்றி சுமந்திரனுடன் குகதாசன் எதுவும் பேசக்கூடாது என்கிற நிபந்தனையுடன் சமரசத்தை முடித்திருக்கிறார்கள்.

எப்படி என்னதான் சமரசம் என்றாலும் இப்போது கட்சியின் கடைசிப் பொதுச் சபைக் கூட்ட முடிவுகளை நடைமுறைப்படுத்துவதுதான் நடக்கப்போகின்றது. இனி ஒரு வருடம் கழித்து பொதுச் செயலாளர் பதவி மாற்றம் என்று வரும்போதுதான் இந்தப் பிரச்சினை மீண்டும் கிளம்பும். ஆனால் பெப்ரவரி 19 கட்சியின் தேசிய மாநாட்டை நடத்தும் அன்றைய தினம் காலையிலேயே கட்சியின் பொதுக் குழுவைக் கூட்டி தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்போகும் தீர்மானங்கள் பற்றி ஆராய்வது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அப்படி ஒருவேளை பொதுக்குழுக் கூட்டம் கூட்டப்பட்டால், மீண்டும் அங்கு சர்ச்சையும் சண்டையும் வெடிக்கும் என்று எதிர்பார்க்கலாம். பொதுச்சபை நிராகரித்த செயலாளரை எப்படிப் பதவியில் தொடர அனுமதிக்கலாம் என்று சிறீதரன் தரப்பினரும் பொதுச் சபை தெரிவு செய்தவரை பொதுச் சபையின் அனுமதியின்றி ஆளுக்கு ஒரு வருடம் என்று எப்படி மற்றவர்கள் தீர்மானிக்க முடியும் என்று சுமந்திரன் தரப்பினரும் பிரச்சினைப்பட மாட்டார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

ஆக மொத்தத்தில் இந்தப் பிரச்சினை இப்போதைக்குத் தீரப்போவதில்லை, கொஞ்ச நாளைக்கு ஓய்ந்திருக்கும் என்று வேண்டுமானால் சொல்லலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## 24 ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலின் பின்னர்தான் நீக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், அவரது ஆட்சியில் உள்ள அரசஊழியர்களும் ஆட்சியில் நீடிப்பதற்கு நான் ஒருபோதும் ஆதரவு வழங்கப்போவதில்லை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்று என்.ஜி.ஒ. நிறுவனங்கள் குரல் எழுப்புகின்றன. ஆனால் வரி குறைக்கப்படவேண்டும் என்று யாராவது குரல்கொடுத்தார்களா?

ஆகவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் என்பதை வெறுமனே புனை கதையாகவே பார்க்கவேண்டியுள்ளது ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றதன் பின்னரே அதுகுறித்து உரையாடுவோம் என்றார்.

## ராஜசிங்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பெயர் பலகையை திரைநீக்கம் செய்து, கீர்த்தி சிறீ ராஜசிங்க நரேந்திரனின் உலோகச் சிலையையும் ஜனாதிபதி திறந்து வைத்தார். இதனுடன் இணைந்ததாக விகாரையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வண. வெலிவிட்ட சரணங்கர சங்கராஜ தேரரின் சிலையும் திரைநீக்கம் செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சிறீ கல்யாணி சாமசிரி தர்ம மகா சங்க சபை மகாநாயக்க தேரர் மல்வானே பஞ்சாசரபிதான தேரரினால் மத அனுஷ்டானங்கள் நிகழ்த்தப்பட்டன. வண. மஹரகம நந்த நாயக்க தேரரினால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது.

இலங்கை மற்றும் தாய்லாந்தில் பௌத்த மதத்தின் மேம்பாட்டுக்காக விசேட பங்காற்றிய உடோம் தம்மானுகுல் விபன்பாவ் தேரருக்கும், துறவி லுவாம்பு சிறீஷி கெத்கேவ் சார்பில் பேராசிரியர் நுவான் காவிந்த விஜேசிங்கவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நினைவுப் பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்வில் ஜனாதிபதிக்கு விசேட நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

வரலாற்று சிறப்பு மிக்க இரத்மலானை பரதம்மசைத்திய பிரிவேனா விகாராதிபதி வண. கலாநிதி மாஇடிபே விமலசார தேரர், கட்டுநாயக்க போதிரத்னாராம விகாராதிபதி வண. அமந்தொலுவே தம்மரதன தேரர் உள்ளிட்ட இலங்கை மற்றும் தாய்லாந்து மகாசங்கத்தினர், புத்தசாசன, மதவிவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டிக்சன் ஜே. பெரேரா உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## எந்தத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வருடம் தேர்தல் வருடமாகும். ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும். இல்லையேல் பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டும். இல்லாதுவிட்டால் வேறொரு தேர்தல்கூட நடத்தப்படலாம். சில சந்தர்ப்பங்களில் தேர்தலொன்று நடத்தப்படாமலும் போகலாம்.

ஆகவே எந்தத் தேர்தல் நடத்தப்படுமென எமக்குத் தெரியாது நாட்டின் பொருளாதார நெருக்கடியினால் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடத்த முடியாது போனது. அதனடிப்படையில் எந்தத் தேர்தல் எப்போது நடைபெறும் என்பதை எமக்குக் கூற முடியாது என்றார்.

## டயானாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தனது பிரித்தானிய குடியுரிமையின் உண்மையை மறைத்து, இலங்கை கடவுச்சீட்டைப் பெற்றுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2004ஆம் ஆண்டு முதல் இராஜாங்க அமைச்சர் வதிவிட மற்றும் வருகை வீசாவைப் பயன்படுத்தி இலங்கைக்கு பல தடவைகள் வருகை தந்தார் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இராஜாங்க அமைச்சர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சவேந்திர பெர்னாண்டோ, இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது ஆட்சேபனைகளை தெரிவித்ததோடு, தனது ஆட்சேபனைகள் மூன்று காரணிகளை அடிப்படையாகக் கொண்டதால் விண்ணப்பத்தை நிராகரிக்குமாறு நீதிமன்றத்தைக் கோரினார்.

இந்நிலையில் குறித்த மனு நாளை (இன்று) மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென நீதிபதிகள் அறிவித்து ஒத்திவைத்தனர்.

## இந்தியச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தப்படுவதோடு இந்த வசதியை மேலும் விரிவுபடுத்துவதன் மூலம், 2024 மார்ச் மாதத்திற்குள், இந்த வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை 65,000 ஆக உயர்த்தப்படும் எனவும இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

தமது வங்கிக் கணக்குள்ள நிதி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு வர்த்தக உடன்படிக்கை செய்து கொள்வதன் மூலம் வர்த்தகம் தொடர்பான ஞசு குறியீட்டை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும் என மத்திய வங்கியின் பணிப்பாளர் (பணம் செலுத்துதல் மற்றும் தீர்வுகள்) வசந்த அல்விஸ் தெரிவித்தார். இலங்கை மத்திய வங்கியில் பதிவுசெய்யப்பட்ட அனைத்து வங்கிகளும் நிதி நிறுவனங்களும் இந்தக் குறியீட்டை வழங்கக் கடமைப்பட்டிருப்பதாக அவர் வலியுறுத்தினார்.

பெரும்பாலான இந்தியர்கள் கியூஆர் குறியீடு ஊடாக கொடுப்பனவுகளை செலுத்துவதற்குப் பழக்கப்பட்டிருப்பதால், இந்திய சுற்றுலாப் பயணிகள், இலங்கை முழுவதும் உள்ள வர்த்தக சமூகத்திற்கு பணம் செலுத்துவதற்கு யுபிஜ-தொலைபேசி செயலிகளைத் தடையின்றிப் பயன்படுத்தலாம்.

ஏற்கனவே உள்ளூர் பரிவர்த்தனைகளுக்கு மிகவும் உகந்த முறைமையான, லங்கா கியூ.ஆர். (Lanka QR) ஊடாக கியூ.ஆர். குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் கொடுப்பனவுகளை செலுத்த முடியும்.

இதன் மூலம் செலுத்தப்படும் பணம் இலங்கை ரூபாவில் உரிய வங்கிக்கணக்கில் வரவுவைக்கப்பட்டு உடனடியாக குறுஞ்செய்தி மூலம் அறிவிக்கப்படும். இவ்வாறாக வருமானத்தை அவர்களது வங்கிக் கணக்குகளில் வரவு வைப்பதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்கு 6 மாதங்களில் குறுகிய காலத்தில் வங்கிக்கடன்களை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் வழங்கப்படும்.

இரண்டாவது கட்டத்தில், இந்த கட்டமைப்பை மேலும் விரிவுபடுத்துவதுடன், இந்தியாவில் கியூ.ஆர். குறியீடு மூலம் பணம் செலுத்தும் வசதியை இலங்கையர்களுக்கு வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

LankaaPay லங்காபே நிறுவனத்தின் தலைவர் கலாநிதி கெனத் டி சில்வா, அதன் பிரதம நிறைவேற்று அதிகாரி சன்ன டி சில்வா, லங்கா டுயமெயஞசு அமுலாக்கக் குழுவின் சார்பில் நேஷன்ஸ்ட்ரஸ்ட் வங்கியின் சிரேஷ்ட உப தலைவர் ரண்டில் பொதேஜு மற்றும் பின்டெக் பிரதிநிதியாக எல்.ஓ.எல்.சி. (LOLC) தலைவர் கொண்ராட் டயஸ் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## இந்தியர்களுக்கான..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேமென்ட்ஸ் லிமிடெட் (NPCI International payments Limited) மற்றும் இலங்கையின் லங்கா பே (Lamkappay) பிரைவேட் லிமிடெட் நிறுவனம் என்பன இணைந்து முன்னெடுக்கும் இந்த வேலைத் திட்டத்தை விரைவாக விரிவாக்கும் நோக்கத்துடன் 10,000 வர்த்தக நிலையங்களில் இந்த கட்டண முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த வசதியை மேலும் விரிவுபடுத்துவதன் மூலம், இந்த வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை மார்ச் 2024க்குள் 65,000 ஆக உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது அண்மைய உத்தியோகபூர்வ இந்தியப் பயணத்தின்போது வெளியிட்ட ' தொலைநோக்கு அறிக்கையின்' பிரகாரம் இரு நாடுகளுக்கும் இடையில் தற்போதுள்ள இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் ஒன்றிணைந்த கொடுப்பனவு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக ஆளும் தரப்புத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் டிஜிட்டல் கொடுப்பனவுகளை அறிமுகப்படுத்தியதன் மூலம், லங்கா பே ஊடாக யுபிஜ பரிவர்த்தனைகள் அறிமுகப்படுத்தப்படும். ஏற்கனவே உள்ளூர் பரிவர்த்தனைகளுக்கு உகந்த முறையான லங்காபே ஆனது கியூ.ஆர். குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் பணம் செலுத்துவதை எளிதாக்குகிறது. அதன்படி, யுபிஜ கைபேசி செயலியைத் தடையின்றிப் பயன்படுத்தி இலங்கை முழுவதும் உள்ள வணிகர் சமூகத்திற்குக் கொடுப்பனவுகளைச் செலுத்த முடியும். மேலும் இந்த ஏற்பாடு நாட்டில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் இந்திய- இலங்கை பொருளாதார உறவுகளையும் வலுப்படுத்தும்.

இலங்கையில் உள்ள சுமார் 20 உள்ளூர் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் இதற்கு தங்கள் ஆதரவை வழங்க ஒப்புக்கொண்டுள்ளன. மேலும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் பகுதிகளுக்கு இந்தச் சேவையை விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் தொடக்க நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த வேலைத் திட்டத்தின் மூலம் இந்தியாவின் தமிழ்நாடு மற்றும் மும்பையுடன் இலங்கை இணைக்கப்படும் எனவும் இதன் மூலம் இலங்கையில் உள்ள சுமார் 400,000 வர்த்தகர்கள் பயனடைவார்கள் எனவும் தெரிவித்தார்.

இலங்கையில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு மட்டுமன்றி இந்திய- இலங்கை பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதற்கும் இது ஒரு தனித்துவமான சந்தர்ப்பம் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அண்மையில் இந்தியாவிற்ச் சென்றிருந்தபோது பிரதமர் நரேந்திர மோடியுடன் தாம் வெளியிட்ட 'தொலைநோக்கு அறிக்கையை' தொடர்ந்து முன்னெடுப்பதற்கு தாம் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். மேலும், அண்மையில் பேர்த்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்

தொடர்ச்சி 8ம் பக்கம்....



காலைக்கதிர் Kalaikkathir

# குமாரபுரம் படுகொலையின் 28ஆவது நினைவேந்தல்!






கிளிவெட்டி - குமாரபுரம் படுகொலையின் 28 ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) குமாரபுரத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது பொதுமக்கள் உயிரிழந்தவர்களின் புகைப்படங்களுக்கு மலர் தூவி, விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர்.

நினைவேந்தலில் அகம் மனிதாபிமான வள நிலையத்தின் இணைப்பாளர் க.லவகுசராசா, தவத்திரு வேலன் சுவாமிகள் உட்பட பொது மக்கள் பலர் கலந்துகொண்டனர்.

1996ஆம் ஆண்டு பெப்ரவரி 11 ஆம் திகதி மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிளிவெட்டி - குமாரபுரம் கிராமத்தில் அத்துமீறி நுழைந்த ஆயுததாரிகளால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூடு மற்றும் வாள்வெட்டு தாக்குதலில் பெண்கள், சிறுவர்கள் உட்பட 26 அப்பாவி பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

அத்தோடு, 15 வயது சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமையும் இடம்பெற்றது.

இப்படுகொலை சம்பவம் தொடர்பாக 1996ஆம் ஆண்டு மூதூர் நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணையில் தெஹிவத்தை இராணுவ முகாமில் சேவையில் இருந்த 8 இராணுவ வீரர்கள் சாட்சியாளர்களால் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு எதிராகக் குற்றவியல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

பின்னர், இவ்வழக்கு திருகோணமலை மேல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்பட்டது.

அடுத்து, இந்த வழக்கு அனுராதபுரம் மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு விசாரணை ஜூரிகள் சபை முன்னிலையில் அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்த நிலையில், 20 ஆண்டுகளுக்குப் பின்னர் 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27 ஆம் திகதி எஞ்சியிருந்த 6 முன்னாள் இராணுவ வீரர்களும் (பிணையில் இருந்தபோது இருவர் இறந்துவிட்டனர்) அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டதுடன், அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுவிக்கப்பட்டனர். இந்தப் படுகொலைச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட உறவுகள் 28 ஆண்டுகளாகத் தமக்கு கிடைக்கப்பெறாத நீதியினை கோரி வருகின்றனர்.

இந்த இனப்படுகொலையால் பாதிப்புக்குள்ளான மக்கள், துயரிலிருந்து மீள முடியாமலும், பொருளாதார ரீதியில் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றமையும் பெரும் பிரச்சினையாகக் காணப்படுகிறது.

தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தோர்
சுப்பையா சேதுராசா
அழகுதுரை பரமேஸ்வரி
அருமைத்துரை வள்ளிப்பிள்ளை
கிட்ணன் கோவிந்தன்
அருணாசலம் தங்கவேல்
செல்லத்துரை பாக்கியராசா
வடிவேல் நடராசா
இராஜேந்திரம் கருணாகரம்
சண்முகநாதன் நிதாந்தன்
இராமஜெயம் கமலேஸ்வரன்
கந்தப்போடி கமலாதேவி
சிவக்கொழுந்து சின்னத்துரை
சிவபாக்கியம் நிசாந்தன்
பாக்கியராசா வசந்தினி
அமிர்தலிங்கம் ரஜனிகாந்தி
தங்கவேல் கலாதேவி
ஸ்ரீபன் பத்துமா
சுந்தரலிங்கம் பிரபாகரன்
சுந்தரலிங்கம் சுபாஜினி
கனகராசா சுவாதிராசா
சுப்பிரமணியம் பாக்கியம்
விநாயகமூர்த்தி சுதாகரன்
ஆனந்தன் அன்னம்மா
விஜயகாந் லெட்சுமி
அருமைத்துரை தனலெட்சுமி உள்ளிட்ட 26 பேர் உயிரிழந்தவர்கள் ஆவர். (05)

## மின்சார சபையின் பொறியியலாளர் கொலை வழக்கில் 33 வருடங்களின் பின் பெண் கைது

இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் ஒருவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் உயர் நீதிமன்றத்தால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பெண் ஒருவர் 33 வருடங்களின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார். பமுனுகம, பண்டாரகம பிரதேச வீடு ஒன்றில் மறைந்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டதாக கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட பெண், கொலை செய்யப்பட்ட பொறியியலாளர் பணியாற்றிய அலுவலகத்தில் ஆங்கில மொழி தட்டெழுத்தாளராகக் கடமையாற்றியவராவார்.

1989ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் திகதி வீடு ஒன்றுக்கு பொறியியலாளரை அழைத்துச் சென்று கொலை செய்ததாக இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு, குற்றம் நிரூபிக்கப்பட்டிருந்தது.

## ஜெயசிறிலுக்கு சமூக சேவைக்கான கலாநிதி பட்டம் அமெ. உலகத் தமிழ் பல்கலைக்கழகம் வழங்கியது

(வி.ரி.சகாதேவராஜா)

அமெரிக்க உலகத் தமிழ் பல்கலைக்கழகம், காரைதீவு முன்னாள் தவிசாளரும் பிரபல சமூக செயற்பாட்டாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலுக்கு சமூக சேவைக்கான மதிப்புறு முனைவர் கலாநிதி பட்டத்தை வழங்கி கௌரவித்தது. சர்வதேச பட்டமளிப்பு விழா கடந்த சனிக்கிழமை இரவு கொழும்பு தாஜ்சமுத்ரா ஹோட்டலில் நடைபெற்றபோது மேற்படி விருது வழங்கப்பட்டது.

உலகத் தமிழ் பல்கலைக்கழகம உள்ளிட்ட 11 அமைப்புக்கள் இணைந்து வருடாந்தம் சமுதாயத்தில் அரசியல், கல்வி, கலை, வாழ்வியல், வியாபாரம் மற்றும் சமூக சேவைகள் செய்த பிரமுகர்களுக்கு இவ்வாறான மதிப்புறு முனைவர் கலாநிதி பட்டத்தை வழங்கி வருகிறது.

அந்தவகையில் இந்த ஆண்டுகான சர்வதேச பட்டமளிப்பு விழா சனிக்கிழமை இரவு நடைபெற்ற போது 25 பிரமுகர்களுக்கு இப் பட்டம் வழங்கி வைக்கப்பட்டன. பல்கலைக்கழக வேந்தர் மற்றும் உபவேந்தர் ஒப்பமிட்ட சான்றிதழ் மற்றும் பதக்கங்களை வழங்கி வைத்தனர்.

காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரான கலாநிதி கி.ஜெயசிறில் கிழக்கில் மிகவும் நன்கு அறியப்பட்ட சமூக சேவையாளராவார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவராவார்.

அனர்த்த காலங்களில் கிழக்கு மலையகம் என நேரடியாக சென்று மக்களுக்கு உதவி வருபவர்.

துணிச்லும் சிறந்த ஆளுமையும் மிக்க பரோபகாரியான இவர் கலாநிதி பட்டத்தை தனது அயராத தொடர் சமூகப் பணிக்காக இள வயதில் (40) பெற்றுள்ளார்.

இவருக்கு கலாநிதி பட்டம் கிடைத்தமையிட்டு இந்திய தமிழகத்தின் சீமான், பழநெடுமாறன், இலங்கையில் இரா.சம்பந்தன், மனோகணேசன், சி.சிறிதரன் மாலை சேனாதிராஜா உள்ளிட்ட பிரபலங்கள் வாழ்த்துக்களை தெரிவித்தனர்

இவரது சமூகப்பணி மேலும் தொடர வேண்டுமென பல்வேறு அமைப்புகள் பல்வேறு பிரமுகர்கள் வாழ்த்துக்களை தெரிவித்த வண்ணம் உள்ளனர்.

## வீதியில் நெல் உலரவிட்டவர் விபத்தில் சிக்கி உயிரிழப்பு

கொடிகாமம் கச்சாய் - புலோலி பருத்தித்துறை பிரதான வீதி மாக்கிராய் பகுதியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பளையில் இருந்து கொடிகாமம் ஊடாக பருத்தித்துறை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள், எதிரே நெல் பரவிக்கொண்டிருந்தவர் மீது மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## வீட்டில் கொள்ளையிட முயன்றவர் அடித்துக் கொலைசெய்யப்பட்டார்

வீடொன்றிற்குள் புகுந்து கொள்ளையிட முயன்ற 3 பேரில் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் மினுவாங்கொடையில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மினுவாங்கொடை, யக்கொடமுல்ல பகுதியில் உள்ள வீடொன்றில் கொள்ளையிட முற்பட்ட 3 பேரில் ஒருவரே அடித்துக் கொல்லப்பட்டுள்ள நிலையில், ஏனைய இருவரும் தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

## தேசிய மக்கள் சக்தியின் பெண்கள் மாநாடு கண்டி மாநகரில் நடந்தது!








(அஸ்ஹர் இப்றாஹிம்)

பெண்களாகிய நாங்கள் ஒன்றுபட்டுள்ளோம். 75 வருடகால தோல்வியடைந்த ஆட்சியை முடிவுக்கு கொண்டு வருவதற்கு கண்டியில் கடந்த சனிக்கிழமை தேசிய மக்கள் சக்தியின் கீழ் ஒன்றிணைந்த பெண்கள் மாநாடு நடைபெற்றது.

கண்டி மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலுமிருந்து கண்டி மாநகரில் ஒன்று சேர்ந்த பல்லின சமூகத்தையும் சேர்ந்த பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் இதில் பங்குகொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நேர்மை இருந்தால் சாத்தியம்

நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறையை ஒழிப்பது என்று ரணில் விக்கிரமசிங்க புறப்பட்டிருக்கிறார். அதற்காக அவர் முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் ஒரு குழுவை நியமித்திருக்கிறார் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருக்கிறார். நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிப்பதற்கான சட்டத் திருத்தங்களை முன்மொழிவதே இந்தக் குழுவின் கடமை.

அரசுத் தலைவர் தேர்தலுக்கு இன்னும் 7 மாதங்களே இருக்கும் நிலையில் நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிப்பதற்கு ரணில் புறப்பட்டிருப்பது எதிர்பார்க்கப்பட்டதைப்போலவே எதிர்க் கட்சிகள் மத்தியில் சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது. இந்த அரசுத் தலைவர் முறைமை இலங்கைக்குப் பொருத்தமற்றது, அதனை மாற்ற வேண்டும் என்பது பெரும்பாலான அரசியல் தரப்புக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைதான். பொதுத் தேர்தலின் விருப்பத் தெரிவு முறை மற்றும் நிறைவேற்று அதிகார முறை இவையிரண்டையும் ஒழிப்போம் என்று இங்குள்ள பெரிய கட்சிகள் ஏற்கனவே தேர்தல் வாக்குறுதிகளை வழங்கியிருக்கின்றன. எனவே அந்த முறைமை ஒழிக்கப்படத்தான் வேண்டும்.

ஆனால். அதனை எப்போது செய்கிறார்கள் எதற்காகச் செய்கிறார்கள் என்கிற கேள்விதான் இப்போது சர்ச்சைக்குள்ளாகி இருக்கின்றது. அரசுத் தலைவரின் இந்த முயற்சிக்குத் தாம் ஆதரவு வழங்கப்போவதில்லை என்பதை முதன்மை எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஏற்கனவே அறிவித்துவிட்டது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையானது நீக்கப்பட வேண்டும், ஆனால் அந்த முறைமையானது எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் பின்னர்தான் நீக்கப்பட வேண்டும் என்று அந்தக் கட்சியின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் தெரிவித்திருக்கிறார்.

''அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், அவரது ஆட்சியில் உள்ள அரச ஊழியர்களும் ஆட்சியில் நீடிப்பதற்கு நான் ஒருபோதும் ஆதரவு வழங்கப்போவதில்லை. நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறைமை நீக்கப்பட வேண்டும் என்று அரச சார்பற்ற நிறுவனங்கள் குரல் எழுப்புகின்றன. ஆனால் வரிகுறைக்கப்படவேண்டும் என்று யாராவது குரல்கொடுத்தார்களா? ஆகவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் என்பதை வெறுமனே புனை கதையாகவே பார்க்கவேண்டியுள்ளது ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றதன் பின்னரே அதுகுறித்து உரையாடுவோம்'' என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

நிறைவேற்றுஅதிகாரத்தைஒழிப்பதற்கானதிருத்தங்கள் வந்தால் அதனைத் தாம் கட்டாயம் ஆதரிப்போம் என்று சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்கனவே அறிவித்துள்ளது. இருந்தாலும் வரப்போகும் அரசமைப்புத் திருத்தம் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதற்கு மட்டுமானதா அல்லது வேறு நோக்கங்களையும் சேர்த்துக்கொண்டு வருமா என்கிற சந்தேகம் அதற்கும் இருக்கின்றது. ஏனைய முதன்மைக் கட்சிகள் இது குறித்து இன்னும் வாய் திறக்கவில்லை. அவற்றில் சிறிய கட்சிகள் இந்த முறை ஒழிக்கப்படுவதை விரும்பவில்லை. மற்றைய கட்சிகளும், கொண்டுவரப்படும் சட்டத்திருத்தத்தைப் பொறுத்தே அதனை ஆதரிப்பதற்கான வாய்ப்புகள் அமையும்.

இந்தச் சட்டத் திருத்தத்தைப் பயன்படுத்தி ரணில் தனது பதவிக் காலத்தை நீடிப்பதற்கோ அல்லது மீண்டும் தான் பதவியில் அமர்வதற்கோ வழி தேடிக்கொள்வார் என்கிற அச்சமே இப்போதைக்கு நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிப்பதை மற்றைய கட்சிகள் ஆதரிக்கத் தயங்குவதற்கான காரணம். எனவே அந்த ஐயங்கள் போக்கப்பட்டு, நேர்மையான வழிவகைகளில் நிறைவேற்று அதிகார முறைமை ஒழிக்கப்படவேண்டும். இலங்கையைக் குட்டிச்சுவராக்கியதில் இந்த முறைமைக்கும் அதிக பங்கு உண்டு என்பதால் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு இந்தப் பதவி முறையை ஒழிப்பது கட்டாயத் தேவை.

# கற்பதரு எனும் அற்புதம்

# பனங்கொட்டை வருகிறது

அங்கம் –28



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், அவுஸ்திரேலியா.

(கற்பக தரு என்னும் அற்புதம் என்ற தொடரின் இரண்டாம் பாகம் இன்று முதல் தொடங்குகின்றது. இனி வரும் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமைகளிலும் இந்தத் தொடர் தவறாது இடம் பெறும்)

"கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு சுட்டாலும் வெண்மை தரும்"

என்று சொல்லுவதை நாமனைவரும் அறிந்திருக்கிறோம். " வகுத்தவன் வல்லவனானால் வறு த்த முத்தும் முளைக்கும் " இதனையும் அறிந்திருப்போம். இவை இரண்டுக்கும் எங்களின் பனங்கொட் டைக்கும் ஒரு இணக்கம் இருக்கிறது. பாட்டுக்கும் , பழமொழிக்கும் பனங் கொட்டைக்கும் என்னதான் முடிச்சுப் போடுகிறீர்கள் என்றுதானே உங்களுக்கு எண்ணத் தோன்றுகிறது.இது முடிச்சல்ல உண்மை நிலையினை காட்டுவதற்குத் துணையாக இவற்றை இங்கே காட்ட வேண்டி ஏற்பட்டது. சங்கினைச் சுட்டாலும் அது பலனளிக்கும். வறுத்த முத்தும் முளைக்கும் என்னும் நிலையானது எங்களின் பனங் கொட்டைக்கே மிகவும் சிறப்பாகப் பொருந்தியே வருகிறது. அதாவது சுட்ட பின்பும் முளைத்து கிழங் காகப் பயன் அளித்து நிற்கும் ஆற்றல் எங்கள் பனக்கொட்டைக்கே உரி த்தானதாகும் என்பதுதான் இங்கு மிகவும் முக்கியமாகும்.ஏனைய விதைகளை சுட்டாலே அவித்தாலோ அவற்றின் முளைக்கும் தன்மை இல்லாமற் போய்விடும்.ஆனால் கற்பகதருவாம் பனையின் விதை மட்டுமே தனித்துவம் மிக்கதாக விளங்கி நிற்கிறது என்பதைக் கட்டாயம் சுட்டிக் காட்டியே ஆதல் வேண்டும் அல்லவா !

பனம்பழமாக இருந்து உணவாக உதவியது. பனம்பழத்தின் களி பலவித உணவுப்பதார்த்தங்களாகி கைகொடுத்து நின்றது. மனிதர்க்கு மட்டுமன்றி ஆடு மாடுகளுக்கும் சாப்பாடாகியும் அமைந்தது. அதன் பின்பும் அது ஓய்ந்து விடவே இல்லை. சாறு எடுத்த பின் சக்கையாக வந்தும் அதனுள் இருக்கும் விதை யினையும் பயனாக்கி எப்படியும் உதவிட வேண்டும் என்று பனையானது எண்ணி நிற்பதால்த்தான் அதனைக் கற்பகதரு என்று வியந்து நிற்கிறோம் என்பது பொருத்தமாக இருக்கிறதல்லவா !

பனங்களியினை எடுத்த பின்னர் மீதமிருக்கும் பனக்கொட்டை கள் ஒரு நாளுமே வீணாகிப் போவதே இல்லை. அவை அத்தனையும் ஒரு இடத்தில் குவித்தே வைக்கப்படுகின்றன. கொத்திப் பதப்படுத்தப்பட்ட நிலத்தில் ஒரு அடி உயரம் வரக்கூடியதாக மண் நிரப்பி உயர்த்தப்படும். இப்படி உயர்த்தப்பட்ட அந்த மண் ணின் மேல் பனங் கொட்டைகள் அடுக்கப்படுகின்றன.அதன் மேல் மண்போட்டு பனங்கொட்டைகள் மூட ப்படுகின்றன. மூடிய அந்தப் பனம் பாத்தியினை ஆடுகளோ மாடுகளோ கிளறா வண்ணம் பாத்திகளின் மேல் ஓலைகள் , முள்ளுகள் போடப்படுவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.. பனம் பாத்திகளில் நீர் தேங்கி நிற்காமல் இருப்பதற்கு பாத்திகளை நடுவில் உயர்த்தி கீழ்ப்பக்கம் சரிவாக அமையும் முறையில் பாத்தியின் அமைப்பு இருக்கும். மழையின் நீரானது பாத்தியின் உள்ளே புகுந்துவிட்டால் முளைக்கும் முளை அழுகிவிடலாம் என்பதால் நீரானாது உட்புகுந்து பாதிக்கா வகையில் பாத்தி பக்குவமாய் அமைக் கப்படுகிறது என்பதும் நோக்கத்தக்கதாகும்.

மணல்பாங்கான பகுதிகளில் பனங்கொட்டைக்குப் பாத்தி அமைப்பது இலகுவாகவே இருக்கும் .தீவுப்ப குதில் அல்லைப்பிட்டி , மண்கும்பான் பகுதிகள் நல்ல மணல் நிறைந்த பகுதிகளாக இருக்கின்றன. இங்கு பனம்பாத்தி அமைப்பது மிகவும் இலகுவாய் அமைகிறது. எனது சிறிய வயதில் அல்லைப்பிட்டியில் இரு ந்த காலத்தில் நானே பனம்பாத்திகளை அமைத்திருக்கிறேன்.



எங்கள் வீட்டைச் சுற்றி பனைமரங்களே நிறைந்து காணப்பட்டன. பனம்பழக் காலங்களில் பனம் பழங் களை பொறுக்குவதற்கு அதிகாலையிலேயே வீட்டில் எழுப்பி விடுவார்கள். நித்திரைத் தூக்கத்தோடு பனம்பழம் பொறுக்கியது இன்னும் நினைவில் இருக்கிறது. எங்கள் வீட்டில் ஆடுகளும் இருந்தன. மாடு களும் இருந்தன. அவற்றுக்குப் பனம்பழக் காலம் என்றால் ஒரே கொண்டாட்டந்தான். பனம்பழத்தை பிழி ந்து அவைகளுக்கு கொடுக்க அவைகள் ஆனந்தமாகப் பார்க்கும் அந்தப் பார்வை இன்னும் கண்ணுக்குள் நிற்கிறது. பனம் பழங்களைத் தேடிப்போய் மாடுகள் பனையின் கீழேயே நிலத்தில் அதுவும் மண்ணிலத் தில் மண் ஒட்ட ஒட்ட சூப்பி நிற்கும் காட்சியை மறக்கவே முடியாமல் இருக்கிறது. அல்லைப்பிட்டியில் பனம்பாத்திகளை அமைப்பதும் பனங்கொட்டைகளை அடுக்குவதும் பெரிய கஷ்டமானதாக இருந்ததே இல்லை.

தீவுப்பகுதியின் ஏனைய பகுதியான நெடுந்தீவில் அல்லைப்பிட்டி போல பனம் பாத்திகளை அமைத் துவிடவே முடியாது. ஏனென்றால் அந்தப் பகுதிகளின் தரையானது கற்கள் நிரம்பியதாகவே காணப் படு கிறது.இதனால் கடற்கரைப் பகுதிகளைத் தேர்ந்தெடுத்து பாத்திகள் அமைப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பனையோடு போட்டி போடத் தென்னை பல நிலைகளில் முயற்சியினை எடுத்து நிற்பதைப் பார்த்தோம். ஆனால் பனக்கொட்டை என்னும் நிலையில் தென்னையால் எதுவுமே செய்ய முடியா நிலையே காணப் படுகிறது எனலாம். தென்னைக்கு இல்லாத விசேடம் பனைக்குப் பலவிதங்களில் அமைந்திருப்பது அது பெற்றுவந்த பெருவரம் என்று தான் எடுக்க வேண்டியிருக்கிறது. தென்னையின் காயினைப் பழுத்த நிலையில் நிலத்தில் பதித்து வைப்பதால் மீண்டும் ஒரு தென்னையே உருவாகும் நிலைதான் ஏற்படும். பனம் விதையினைப்னைப்போல் மரமாயும், கிழங்காயும் பரிணமிக்கும் பாங்கு தென்னைக்கு

(5ஆம் பக்கம் பார்க்க..)

# பனங்கொட்டை வருகிறது...........

(4ஆம் பக்கத் தொடர்ச்சி..)

வாய்க்கவில்லை என்பது நோக்கத்தக்கதாகும். தென்னையானது பனையோடு போட்டி போட ஓடி வந்தாலும் ஒரு குறிப்பி ட்ட நிலையில் அதனால் தொடரமுடியாமல் ஆகியே விடுகிறது என்பதுதான் உண்மை யெனலாம். என் றாலும் தென்னையும் விட்டேனா பார் என்றுதான் இருந்து கொண் டே வருகிறது.

யாழ்ப்பாணத்தின் பகுதிகளில் மண்ணின் தன்மைகள் மாறுபட்டுக் காணப்படுகின்றன. செம்பாட்டு நில மாக இருக்கும் நிலங்கள் மண்ணிறைந்த தரைகள் போன்று மென்மையானதாக இருப்பதில்லை. இங்

கெல்லாம் பனம்பாத்திகளை அமைக்கும் பொழுது செம்மண்களை வெட்டி எடுத்து அதன் பின் அவற் றை குவித்து மேடைகளாக்கியே பனம் பாத்திகளை அமைக்கும் நிலை காணப்படுகிறது என்பது நோக்கத்தக் கதாகும். மணல் பாங்கான பகுதிகளில் பனம் பாத்திகளை அமைப்பதும், பின்னர் பனங்கிழுங்குகளைப் பிடுங்கி எடுப்பதும் மிகவும் இலகுவாகவே காணப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். செம்மண் உள்ள தரையில் பாத்திகளை அமைக்கும் பொழுது அந்தப் பாத்திகளில் மழைகாரணமாக ஈரலிப்பு ஏற்பட்டு பின் னர் வெய்யிலினால் வரளும் நிலை ஏற்படுகையில் அந்த மேல் மண் நன்றாகவே இறுகிவிடுகிறது. கிழங்கினைப் பிடுங்கும் பொழுது - மணல்பாங்கான பகுதிகளில் பிடுங்குவதுபோல இலகுவாகப் பிடுங்கி எடுக்க இயலா நிலை இருக்கிறது என்பதையும் கருத்திருத்தல் வேண்டும்.

பனங்கொட்டைகளுக்கான மேடைகள் அமைக்கப்பட்டு அங்கு பனங் கொட்டைகள் அடுக்கப்படும் காலமாக ஆவணி, புரட்டாதி , ஐப்பசி மாதங்கள் இருக்கின்றன.மேடையில் இடப்பட்ட பனங்கொட்டைகள் கிழங்காகப் பயன் கொடுக்கும் காலங்களாக தை தொடக்கம் சித்திரை வரை அமைகிறது எனலாம்.இப்படி அமைவதுதான் பருவகாலப் பனங்கிழக்கு. பருவம் அல்லாத காலங்களிலும் பனங்கிழங்கு கிடைக்கும் நிலையும் காணப்படுகிறது என்பதும் கருத்திருத்த வேண்டிய கருத்தெனலாம். பனம்பழாமனது ஆனி , ஆடி மாதங்களில் அருமையாகக்கிடைக்கும் நிலையும் காணப்படுகிறது. இது காலந்தப்பிய பனழ்பழம் என்று தான் கொள்ளல் வேண்டும். இப்படி வருகின்ற பனம்பழங்களின் கொட்டைகளை மேடை அமைத்து அதில் அடுக்கப்படுகிறது.

இக்காலங்களில் மழை இல்லாமல் இருப்பதால் பனம்பாத்திகளுக்கு உரிய நீர் கிடை க்கா நிலையும் ஏற்படுகிறது. அதனால் பனம்பாத்திகளுக்கு உரிய நீரை பனம் பாத்தியினை அமைத் தவர்களே ஏதோ ஒரு வகையில் கிடைக்கச் செய்யும் ஒரு சங்கடமும் ஏற்படுகிறது. கிணற்று நீரினை யினையோ அல்லது குழத்து நீரினையோ இதற்குப் பயன்படுத்தும் ஒரு கட்டாயம் அப்போது வந்துவிடு கிறது. இப்படியாக முயன்று எடுக்கும் பனங்கிழங்குக்கு மிகவும் வரவேற்பும் கிடைக்கிறது என்பது நோக் கத்தக்கதாகும். ஐப்பசி , கார்த்திகை மாதங்களில் பிடுங்கப்படும் பருவம் தப்பிய பனங் கிழங்குகள் விற்பனையில் பெரிதும் முக்கியத்துவம் பெற்று நல்ல விலைக்கும் விற்கப்படுவது என்பது மிகவும் முக்கிய நிலையாகும்.

கிழங்குளை நிலத்தில் நட்டுத்தான் பின்னர் கிழங்குகள் எடுக்கப்படுகின்றன. இதுதான் சாதாரண நடைமுறையாகும். ஆனால் கொட்டையினை நட்டு அதிலிருந்து கிழங்கினை எடுக்கும் நிலை என்பது வித்தியாசமான நிலையாக காணப்பட்டுகிறது அல்லவா ? அந்த வித்தியாசத்தைக் காட்டி நிற்பதுதான் பனங்கொட்டையின் சிறப்பாக அமைந்திருக்கிறது. ஒரு பொருளை நட்டால் அதன் அடியில் வேர்தான் வரும். மேற்பகுயில்த்தான் இலைவரும் காய்வரும், கனிவரும் .இது சாதாரணமான நிலை. ஆனால் பனங்கொட்டை மட்டுமேதான் அதன் வேரினை நாங்கள் உணவாக்கும் கிழங்காக வழங்கி நிற்கிறது என்பது வியப்பாக இருக்கிறதல்லவா !

நிலத்தின் தன்மைக்கு ஏற்ப அங்கு பிடுங்கப்படுகின்ற பனங்கிழங்கு அமைகிறது என்பது குறிப்பிடத்தக் கதாகும். கிழங்கில் காணப்படுகின்ற தும்புத்தன்மை, அதில் அடங்கியிருக்கும் மாப்பிடிப்பு, அதன் திரட்சி, கிழங்கின் நீளம் , யாவுமே நிலத்தினாலேதான் தீர்மானிக்கப்படுகிறது. மணல்பாங்கான பகுதிகளில் வரு கின்ற கிழங்குகள் உருண்டு திரண்டு பார்ப்பதற்கு மனத்தை ஈர்க்கும் பாங்கிலே காணப்படும். தீவுப்பகுதிப் பனங்கிழங்குகள் குறைவான தும்பினைக் கொண்டிருப்பதோடு தனியான சுவையினை உடையதாகவும் இருக்கிறது.

அதே வேளை மன்னார் பகுதிக் கிழங்கும் தனிச்சுவையினத் தருவதாகவும், நல்ல மாப்பிடிப்பி னைக் கொண்டதாகவும் , குறைவான தும்பினை உடையதாகவும் இருக்கிறது.

**தலையோர் நுங்கின் தீஞ்சோறு மிசைய**
**இடையோர் புழத்தின் பைங்கனி மாந்தக்**
**கடையோர் விடுவாய் பிசிரொடு சுடுகிழங்கு நுகர**
**நிலமார் வையத்து வலமுறை வளைஇ**
**வேந்து பீழித்த ஏந்துவேல் தானையொடு**
**ஆற்றல் என்பதன் தோற்றம் கேள் இனிக்**

என்கிறது புறநானூற்றுப் பாடல். ஒரு அரசனுடைய படையானது அணி வகுத்துச்செல்கிறது. படையின் முன்னணியினர் பனையின் நுங்கினைச் சுவைக்கிறார்கள்.அடுத்த அணியினர் பனம்பழத்தினைச் சுவைக்கிறார்கள். இறுதியாகச் செல்லும் படையணியானது பிளந்த வாயையுடைய பிசிருடன் கூடிய சுடப்பட்ட கிழங்கினைச் சுவைக்கிறார்கள் என்று விளக்கி நிற்கிறது. நுங்கின் காலம் , பனம்பழத்தின் காலம், பனங் கிழங்கின் காலம் என்று எல்லாக் காலமும் காட்டபடுவதால் , படையின் நீளமும் , படைவீரர்களின் தொகையும் சொல்லாமலேயே சொல்லப்படுகிறதல்லவா ? அது மாத்திரமல்ல பனையின் ஒவ்வொரு பருவத்துக்குமான பொருட்களை அப்படை சுவைத்து மகிழ்வதும் புலப்படுத்தப்பட்டும் இருக்கிறதல்லவா ? பனங்கிழங்கு பற்றிய செய்தி வருவருவதுதான் இங்கு மிகவும் முக்கியமாகும்.

பனங்கிழங்கினைப் பற்றி புறநானுற்றுப் பாடல் காட்டியதைப் பார்த்தோம். யாவரும் அறிந்த ஒரு பாடல் பனங்கிழங்கினை எப்படிக் காட்டு கிறது என்பதையும் பார்ப்பதும் பொருத்தமாய் இருக்குமல்லா !

**நாராய் நாராய் செங்கால் நாராய்**
**புழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன**
**பவளக் கூர்வாய் செங்கால் நாராய்**

என்பதுதான் அப்பாடல். இதில் முக்கியமான இடம் பனங்கிழங்கு காட்டப்படும் இடமேயாகும். பனங் கிழங்கினைப் பிளந்தால் எப்படி இருக்குமோ அப்படி நாரையின் அலகு காணப்பட்டதாம் என்று இப்பாடல் காட் டுகிறது. பனையின் கிழங்கினைப் பிளந்தால் அதன் அமைப்பு நுனி கூர்மையாக அடிப் பகுதி சற்றுப் பரும னாகவே காணப்படும். பனங் கிழங்கு பிளந்தால் அங்கு செம்மை நிறம் காணப்படும். அதனை இப் பாடலை இயற்றிய புலவர் பவளத்தின் நிறத்துக்கு ஒப்பிடுகிறார். நாரையின் அலகுக்கும் பனங் கிழங் கின் பிளந்து நிற்கும் அமைப்பினுக்கும் உவமை கண்டவர்தான் சத்திமுத்தப் புலவர்.இப்பாடல் வாயிலாக எங்கள் பனங்கிழங்கானது பாடலில் நல்லதோர் உவமையினைத் தருவதற்கு கைகொடுத்து நிற்கிறது என்பதைக் கருத்திருத்துவது நலமாகும்.


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு
கற்பகவனம்
செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swhpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# கல்முனை யங் பேட்ஸ் ஜனாஸா நலன்புரி அமைப்புடன் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா விசேட சந்திப்பு

(எஸ்.அஷ்ரப்கான்)

கல்முனை யங் பேட்ஸ் ஜனாஸா நலன்புரி அமைப்புக்கும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கல்முனை கிளை நிர்வாகத்திற்கும் இடையிலான விசேட சந்திப்பு கடந்த சனிக்கிழமை மாலை அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கல்முனை கிளை காரியாலயத்தில் இடம் பெற்றது.

கல்முனை யங் பேட்ஸ் ஜனாஸா நலன்புரி அமைப்பின் இவ் உயரிய சேவைக்கு ஆதரவு வழங்கி, ஊக்குவிக்கும் நோக்கில் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது, ஜனாஸா நல-ன்புரி சேவை வாகன கொள்வனவுக்கான ஒரு தொகை நிதி அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கல்முனை கிளை உயர்பீடத்தினரால் ஜனாஸா நலன்புரி அமைப்பினரிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை கல்முனை கிளை தலைவர் மௌலவி ஏ.எல்.எம் முர்ஷித் (முப்தி), செயலாளர் மௌலவி எம்.எச்.எப்.எம். ரஹ்மத்துல்லாஹ், பொருளாளர் மௌலவி எம்.ஐ.எம். ஆஸிக் அலி, உப தலைவர் மௌலவி கே.எல்.எம். சியானுடீன் (முப்தி), செயற்குழு உறுப்பினர்களான மௌலவி ஐ.எல்.நஸீர், மௌலவி ஏ.எம்.றஸீன், மௌலவி எச்.எம். ஆஸிப் ஆகியோரும் கல்முனை யங் பேட்ஸ் ஜனாஸா நலன்புரி அமைப்பின் தலைவர் எம்.எம்.மர்சூக் தலைமையில், செயலாளர் எம்.வை.பாயிஸ், பொருளாளர் எம்.எச்.எம்.நியாஸ்,

உப தலைவர் எஸ்.அஷ்ரப்கான், உப செயலாளர் மிப்றாஸ் மன்சூர், உட்பட அமைப்பின் அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.



இங்கு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கல்முனை கிளை தலைவர் முர்சித் முப்தி உரையாற்றும்போது,

இஹ்லாசான எண்ணத்துடன் எமது இந்த சேவையை செய்து வருகின்றபோது சகல தேவைகளையும் இறைவன் பூரணமாக்கி தருவான் என்றும் மிகச் சிறப்பான இந்த சேவைக்கு எங்களால் ஆன சகல ஒத்துழைப்புகளையும் தருவோம் என்றும் அது போன்று, அமைப்புக்கு இருக்கின்ற தேவைகளை நிவர்த்தி செய்ய எங்களுடைய முழு பங்களிப்பையும் செய்வோம் என்றும் குறிப்பிட்டார். (05)

# ஜீவ ஊற்று அன்பின் கரம் அமைப்பால் வீடற்ற குடும்பத்திற்கு வீடு வழங்கல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நாட்டில் பொருள்களின் விலை உயர்வின் நிமித்தம் நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு வாழ்வதற்கே வழியின்றி தவிக்கின்ற போதிலும் ஜீவ ஊற்று அன்பின் கரம் அமைப்பானது இப் புதிய ஆண்டிலும் தன்னுடைய உன்னதமான பணிகளை சிறப்பாக செய்து வருகின்றது.

விசேடமாக நிரந்தர வீடின்றி அல்லலுறுகின்ற மக்களிற்கு நிரந்தர வீடுகளை நிர்மாணித்து கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் ஜீவ ஊற்று அன்பின் கரத்தின் 133 ஆவது இல்லமும் அடித்தளத்தை மீட்டெடுப்பதற்கான உறுதிமொழி இனது முதலாவது இல்லத்திற்குமான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

இவ் இல்லமானது திருகோணமலை மாவட்டத்திலுள்ள குச்சவெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட தென்னைமரவாடி பகுதியில் பல்வேறான இன்னல்களுடன் வீடற்ற நிலையில் வாழ்ந்து வந்த குடும்பத்திற்கே வழங்கப்படவுள்ளது.

இம் மகத்தான சேவைக்கான நிதி உதவியைஆஸ்திரேலிய மற்றும் இலங்கையில் செயற்படுகின்ற அடித்தளத்தை மீட்டெடுப்பதற்கான உறுதிமொழி இனது ஸ்தாபகர் வழங்கியிருந்தார். (05)





## இந்தியர்களுக்கான..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டதாகவும், தொலைநோக்கு அறிக்கையை அமுல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து திருப்தியடைவதாகவும்,மொரீஷியஸ் அரசுடனான ஒத்துழைப்பு மேலும் விரிவடையும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்திய-இலங்கைஉறவில்இது மற்றொருமுக்கியமானதருணமாக கருதுகிறேன். சில வாரங்களுக்கு முன்பு நீங்கள் ராமர் கோயிலை திறந்து வைத்தீர்கள். அதற்கு நான் உங்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்கிறேன். இந்தத் திட்டம் நமக்குஇடையேயானபொருளாதார மற்றும் கலாசார உறவைப் பிரதிபலிக்கிறது.

நமது இரு நாடுகளுக்கும் இடையே பல்லாயிரம் வருடங்களுக்கு மேலாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அப்போது பயன்படுத்திய நாணயங்கள் இன்றும் நமது அருங்காட்சியகங்களில் உள்ளன. மேலும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையான தென்னிந்திய நாணயங்கள் இலங்கையின்பல்வேறுபகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

எனவே, நாம் அந்த உறவை தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்துவதையே இன்று செய்கிறோம். எங்களுக்கு இனி நாணயங்கள் தேவையில்லை. லங்காகியூ.ஆர். மற்றும்என்.பி.சி.ஐ நிறுவனங்கள் இணைந்துள்ளன.

அத்துடன் இந்தியாவில் இருந்து இலங்கைக்குஅதிகளவானசுற்றுலாப் பயணிகள் வருகை தருவதனால் எமது நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இம்முறையைப் பயன்படுத்தி கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும்.

இலங்கைக்கும்தமிழ்நாட்டுக்கும் இடையில் மற்றும் இலங்கைக்கும் மும்பைக்கும் இடையிலான பரிவர்த்தனைகள் பெருமளவில் மேற்கொள்ளப்படுகிறன. குறிப்பாக வர்த்தகர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன். இதில் சுமார் 400,000 வர்த்தகர்கள் தொடர்புபட்டுள்ளனர் என்று கருதுகிறேன்.

இந்திய-இலங்கைஉறவுகளை மேலும் வலுப்படுத்தும் வாய்ப்பாக இதனை அடையாளப்படுத்தலாம். எனதுஅண்மையஉத்தியோகபூர்வ இந்தியப் பயணத்தின்போது, இந்தியப் பிரதமரும் நானும் வெளிப்படுத்திய 'தொலைநோக்கு அறிக்கையை'செயல்படுத்தநாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். அண்மையில்பேர்த்தில்வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருடன் நான் கலந்துரையாடினேன். இந்த வேலைத்திட்டத்தில் நாம் அடைந்துள்ளமுன்னேற்றம்குறித்து நாங்கள் திருப்தி அடைகிறோம். மேலும் இந்தச் செயல்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்க எதிர்பார்க்கிறோம்.

புதிய உறவுகளை கட்டியெழுப்பக்கூடிய ஏனைய துறைகளை அடையாளம் காண வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. என்னைப் பொறுத்தவரை இது மகிழ்ச்சியான விடயம். இந்த திட்டத்தின் மூலம், மொரிஷியஸுடனும் இணைந்துள்ளோம். நாங்கள் தீவு நாடுகளாக இருப்பதால் இந்த திட்டத்தைத்தொடர்ந்துமுன்னெடுக்க முடியும் என்று நான் நம்புகிறேன்.

நமது இரு நாடுகளுக்கும் இடையே வரலாற்று ரீதியான உறவு காணப்படுகிறது. மொரிசியஸுடன் நெருக்கமான உறவுகளைப் பேணுவதற்கு இலங்கை எதிர்பார்க்கிறது. மேலும், பேர்த்தில் மீண்டும் இந்திய வெளியுறவுஅமைச்சருடன்எங்களது எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தேன். இந்தத் திட்டத்தைத் தொடங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்கியபிரதமர்மோடிக்குமீண்டும் நன்றி தெரிவிக்கிறேன்.' என்றார்.

தொடர்ச்சி 8ம் பக்கம்....




# கற்சிலை மடுவில் சிறப்பாக நடந்த பொங்கல் நிகழ்வும் உழைப்போர் மதிப்பளிப்பு நிகழ்வும்





'நம்பிகை கொடுப்போம் நம்பிக்கை கொடுப்போம்' எனும் மகுட வாசகத்துடன் மக்களுக்காக பல்வேறு சமூகநலப் பணிகளை ஆற்றி வரும் ஏர் நிலம் தொண்டமைப்பின் நான்காவதாண்டு பொங்கல் விழாவும் உழைப்போர் மதிப்பளிப்பு நிகழ்வும் 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' எனும் தொனிப்பொருளில் ஞாயிற்றுக்கிழமை கற்சிலைமடு மாவீரன் பண்டாரவன்னியன் சிலை வளாகத்தில் மிக சிறப்பாக நடைபெற்றது.

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அதிபர் சின்னப்பா நாகேந்திரராசா தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு பாரம்பரிய பொங்கல் நிகழ்வும் அதனை தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இறுதியாக விவசாய துறையின் முதுசமாக திகழும் கற்சிலைமடு ஒட்டுசுட்டான் பகுதியைச் சேர்ந்த திரு.திருமதி கிட்டிணபிள்ளை இராசமணி தம்பதியினர் பனந்தொழில் வல்லுநராக முதுசமாக திகழும் சிலையடி கற்சிலைமடு ஒட்டுசுட்டான் பகுதியை சேர்ந்த

திரு.திருமதி சகுந்தர்ராஜா சிவதலம் தம்பதியினர் கைம்பணி துறையின் முதுசமாக திகழும் கற்சிலைமடு ஒட்டுசுட்டான் பகுதியை சேர்ந்த விஜயரத்தினம் சுசிலாதேவி தம்பதியினர் விவசாய துறையின் முதுசமாக திகழும் கனேசபுரம் ஒட்டுசுட்டான் பகுதியை சேர்ந்த திரு.திருமதி நாகராசா சோதிப்பிள்ளை தம்பதியினர் விவசாய துறையின் முதுசமாக திகழும் முத்துவிநாயகபுரம் இரண்டாம் கண்டம் ஒட்டுசுட்டான் பகுதியை சேர்ந்த திரு. திருமதி சிவராஜா கலைவாணி தம்பதியினர் விவசாய துறையின் முதுசமாக திகழும் பண்டாரவன்னி ஒட்டுசுட்டான் பகுதியை சேர்ந்த திரு.திருமதி கந்தசாமி இராசமணி தம்பதியினர் விவசாய துறையின் முதுசமாக திகழும் பேராறு ஒட்டுசுட்டான் பகுதியை சேர்ந்த திரு.திருமதி கிருஸ்னசாமி ஜானகி தம்பதியினர் விவசாய துறையின் முதுசமாக திகழும் மன்னாகண்டல் ஒட்டுசுட்டான் பகுதியை சேர்ந்த திரு.திருமதி இராசையா பாக்கியம் தம்பதியினர் விவசாய துறையின் முதுசமாக திகழும் கூழாமுறிப்பு ஒட்டுசுட்டான் பகுதியை சேர்ந்த திரு. திருமதி சின்னராசா மேரியம்மா தம்பதியினர் விவசாய துறையின் முதுசமாக திகழும் பழம்பாசி ஒட்டுசுட்டான் பகுதியை சேர்ந்த திரு திருமதி பத்மநாதன் விமலா தம்பதியினர் ஆகியோர் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து நினைவு கேடயங்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட திட்டமிடல் வைத்திய அதிகாரி வைத்தியர் கைலாயநாதன் சுதர்சன், ஏர்நிலம் அமைப்பின் ஆலோசகர் கிளிநொச்சி முருகானந்தா கல்லூரி அதிபர் இ.சூரியகுமாரி, சட்டத்தரணி கனகரத்தினம் பார்த்தீபன், ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலைய குழுத்தலைவர் இ.வேதநாதன், ஒட்டுசுட்டான் மற்றும் முத்துவிநாயகபுரம் கிராம அலுவலர் லலிதா நிவேகாந்தன் ஆயுள்வேத வைத்தியர் நாகமணி வன்னியசிங்கம் மற்றும் ஏர் நிலம் அமைப்பினை சாந்தவர்கள், கலைஞர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (05)

## வவுனியா வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலயத்துக்கு பௌத்த குருமாரை அழைத்து வந்த இராணுவம்



வவுனியா வடக்கு, வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலயத்திற்கு ஞாயிற்றுக்கிழமை திடீரென விஜயம் செய்த பௌத்த குருமாரை இராணுவத்தினர் தமது உழவு இயந்திரத்தில் ஏற்றி சென்றமை தெரிய வந்துள்ளது.

நீதிமன்ற தீர்ப்பு வரை சென்று தற்போது வழிபாடுகள் இடம் பெற்று வரும் நிலையில், ஞாயிற்றுக்கிழமை பௌத்தகுருமார் உள்ளடங்கிய குழுவினர் வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலய பகுதிக்குச் சென்றிருந்தனர்.

இதன்போது, கொழும்பில் உள்ள தேசிய மரபுரிமைகளை பாதுகாப்பதற்கான அமைப்பின் தலைவர் மெதகொட அபய திஸ்ஸ தேரர், சர்ச்சைக்குரிய முல்லைத்தீவு குருந்தூர் மலை விகாராதிபதி கல்கமுவ சாந்தபோதி தேரர் உள்ளிட்ட குழுவினரே இராணுவ பாதுகாப்புடன் பிரசன்னமாகியிருந்தனர். அங்கு சென்ற பௌத்த குருமார் இது தமது பூர்வீக இடம் என மீண்டும் சர்ச்சையை உருவாக்கியிருந்தனர் எனத் தெரியவருகின்றது.

வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயம் அமைந்துள்ள பகுதிக்கு இராணுவத்தினர் தமது உழவு இயந்திரத்தில் குறித்த குழுவினரை அழைத்து சென்றமை தற்போது ஆதாரமாக வெளிவந்துள்ளது. குருந்தூர் மலை உட்பட பல்வேறு இடங்களிலும் பௌத்த குருமார் இராணுவத்தினர் மூலமாக செயற்பட்டு வரும் நிலையில் வெடுக்குநாறி ஆலயத்திலும் இராணுவத்தினரை பின்புலத்தில் இருந்து பௌத்த மயமாக்கல் செயற்பாட்டுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றமை இதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (05-100)

## கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா! படகுக் கட்டணம் இம்முறை நபருக்கு 1,500 ரூபா

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா இந்த வருடம் யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் ஒருங்கிணைப்பின் கீழ் யாழ் ஆயர் இல்லம், இலங்கை கடற்படை, நெடுந்தீவு பிரதேச செயலகம் மற்றும் சம்பந்தப்பட்ட சகல திணைக்களங்களினது முழுமையான ஒத்துழைப்புடன் பெப்ரவரி 23 மற்றும் 24 ஆந் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் மேற்டி விடயம் சர்பாக யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தால் முக்கிய விடயங்கள் பொதுமக்களுக்கு அறிவிக்கபட்டுள்ளன. 2024.02.23 ஆந் திகதி காலை 5 மணி தொடக்கம் மு.ப 10 மணி வரை அரச பஸ்கள் மற்றும் தனியார் பஸ்கள் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து குறிகாட்டுவான் வரை சேவையில் ஈடுபடும்.

கச்சதீவுக்கான படகுச்சேவை குறிகாட்டுவான்,நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய இறங்குதுறைகளில் இருந்து 2024.02.23 ஆம் திகதி காலை 5 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சேவையில் ஈடுபடுத்தப்படும்.

குறிகாட்டுவான், நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய இறங்குதுறைகளில் இருந்து பயணிக்கும் ஒரு நபருக்கான படகிற்குரிய ஒரு வழிப் பயணக் கட்டணம் ரூ.1500 ஆகும்.

வெளி மாவட்டங்களிலிருந்து தமது சொந்தப்படகுகளில் திருவிழாவிற்கு செல்வோர் தமது வசிப்பிடங்களிற்கு அருகிலுள்ள கடற்படை முகாம்களில் தொடர்புகொண்டு உரிய கடற்பயணப் பாதுகாப்பு அனுமதியினை பெற்றுக்கொள்வதுடன் படகுகளில் பயணம் செய்பவர்கள் தனித்தனிப் படகாக பயணம் செய்யாது குழுவாக இணைந்து பாதுகாப்பான முறையில் பயணிப்பதுடன் 23 ஆம் திகதி பிற்பகல் 6 மணிக்கு முன்னதாக கச்சதீவை வந்தடைவதற்கேற்றவாறு தங்களது பயணங்களை ஆரம்பிக்கவேண்டும். கச்சதீவு உற்சவத்தில் கலந்து கொள்ளும் யாத்திரிகர்கள் தங்களுக்கு தேவையான உணவு மற்றும் குடிநீர் ஏற்பாடுகளுடன் வருகைதருதல் வேண்டும். கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயமானது யாத்திரிகர்களின் புனித தலமாகவுள்ளதால் மது பாவனைப்பொருள்கள் கொண்டு செல்லுதல் மற்றும் பாவித்தல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. (05)

## கரையோரம் ஒதுங்கிய சடலம்

(பாறுக் ஷிஹான்)



அம்பாறை பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாண்டிருப்பு கல்முனை எல்லை வீதி பகுதியில் உள்ள கடற்கரையோரப் பகுதியில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய சம்பவ இடத்துக்கு வருகை தந்த பெரிய நீலாவணை பொலிஸார் ஆரம்பக்கட்ட விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்த மரணம் தற்கொலையா அல்லது கொலையா என்ற கோணத்தில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். அத்துடன் 60 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் ஒன்றே மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

## மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி சங்கத்தின் சிரமதான நிகழ்வு!

( எம்.எம்.ஜெஸ்மின்)

மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரிச் சங்கம் ஒழுங்கு செய்திருந்த டெங்கு ஒழிப்பு சிரமதான நிகழ்வு மாளிகைக்காட்டில் அண்மையில் இடம்பெற்றது.

இச் சிரமதான நிகழ்வில் சங்க உறுப்பினர்கள் மற்றும் பிரதேசவாசிகள் கலந்து கொண்டனர். (05)





## பொருளாதாரத்தைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஆண்டு தொடர்பில் குறிப்பிடுவதாயின், வரிப் பணம் உட்பட மொத்த அரச வருமானம் 3201 பில்லியன் ரூபாய். அதற்காக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் 1550 பில்லியன் ரூபாவும், இலங்கை சுங்கத்தினால் 923 பில்லியன் ரூபாவும், மதுவரித் திணைக்களத்தினால் 169 பில்லியன் ரூபாவும், மோட்டார் வாகனத் திணைக்களத்தினால் 20 பில்லியன் ரூபாவும் பங்களிப்புச் செய்துள்ளன. இந்தத் தொகை திறைசேரிக்குக்கிடைத்தவருமானம் ஆகும். ஆனால் கடந்த வருடம் திறைசேரியால் செலவிடப்பட்ட பணத்தின் அளவு 4394 பில்லியன் ரூபாவாகும்.

நிவாரணங்கள், அரச கடன்கள், அரச ஊழியர்களுக்கான சம்பளம் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், திறைசேரியில் இருந்து 13,292 பில்லியன் ரூபா உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக செலவிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக எரிபொருள் வழங்கப்படுகிறது. எரிவாயு வரிசைகள் இல்லை. தடையற்ற மின் விநியோகம் இருக்கிறது. அரச ஊழியர்களுக்கு குறித்த திகதியில்சம்பளம்வழங்கப்படுகிறது. இந்த செயற்பாடுகள் மூலம் ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்படும் பொருளாதார வேலைத்திட்டத்திற்கு மாற்றாக வேறுவழி எதுவும் இல்லை என்பது நிரூபணமாகியுள்ளது.

அதிகாரத்தைப் பெறுவதற்காக மேடைகளில்சிலகுழுக்கள்பல்வேறு பொய்யான அறிக்கைகளை வெளியிட்டாலும், பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்குஎன்னவேலைத்திட்டத்தை மேற்கொள்வோம் என்பதை அந்தக் குழுக்கள் மக்களுக்குக் கூற சொல்ல வேண்டும். நிவாரணப் பகுதியை குறைக்கிறார்களா? இல்லை என்றால் அரச கடன் பகுதியை குறைக்கிறார்களா? அல்லது அரச உழியர்களின் சம்பளத்தில் கைவைக்கிறார்களா? என்பதை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

மக்கள் விடுதலை முன்னணி போன்ற குழுக்களுக்கு அரச நிதி முகாமைத்துவம் மற்றும் பொருளாதார உறுதிப்பாடு பற்றிய அறிவு பலவீனமாகவே உள்ளது. மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த சிலர் ஆட்சியில் பங்கேற்ற காலம் மிகக் குறைவு. அப்போது, தாங்கள் வெற்றி பெற்ற திஸ்ஸமஹாராம பிரதேச சபையைஉரியமுறையில்நிர்வகிக்க முடியாததால் மீண்டும் அடுத்த அரசியல் குழுவுக்கு அதிகாரத்தை வழங்க மக்கள் தீர்மானித்தனர்.

2003ஆம் ஆண்டு, பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்க, இலங்கையில் பொருளாதார நெருக்கடிஏற்படுவதைத்தடுப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அந்த சட்டமூலத்தில் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை உள்நாட்டு உற்பத்தியில் 5சதவீதமாக வைத்திருப்பது மற்றும் அரச கடனை 60சதவீதமாக பேணுவது போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. ஆனால், பின்னர் வந்த அரசாங்ககளால் அதைச்செயல்படுத்தமுடியவில்லை.

இதனால், 2022 ஆம் ஆண்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பொருளாதார நெருக்கடிக்கு முற்றுப்புள்ளிவைத்து நாட்டை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தார்' என்றார்.

## ஒரு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்கூட்டிய தேர்தலுக்குச் செல்ல விரும்பப்போவதில்லை. அதனடிப்படையில் அவர் தொடர்ந்தும் ஒருவருடமாவது பதவியினை நீடிப்பதற்கே முயற்சிகளை மேற்கொள்கின்றார்.

## பலாலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய வகையில்500ஏக்கரைசுவீகரிக்கும் வகையில்இரகசியமாகநிலங்களை அளவிடும்முயற்சிஇடம்பெறுகின்றது எனஅறிந்துஅப்பகுதியில்குவிந்தமக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டு தமது நிலங்களை அளவீடு செய்ய அனுமதிக்க முடியாது எனப்போராட்டத்தில் ஈடுபட்டனர். மக்களின் போராட்டத்தையடுத்து அதிகாரிகள் நில அளவையைக் கைவிட்டுதமது அலுவலகங்களுக்கு திரும்பிச் சென்றனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:

kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# தென்கிழக்குப் பல்கலைப் பட்டமளிப்பு விழா மேடையில் பலஸ்தீன கொடியை சால்வையாக அணிந்த மாணவன்



(கே எ ஹமீட்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொது பட்டமளிப்பு விழாவில் - ஞாயிற்றுக்கிழமை தனது கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட ஒட்டமாவடியைச் சேர்ந்த யஸீர் அரபாத், பட்டமளிப்பு விழா மேடையில் பலஸ்தீனக் கொடியை சால்வையாக அணிந்து நின்றமை பலரின் கவனத்தையும் ஈர்த்தது.

யஸீர் அரபாத் - தனது பட்டத்தைப் பெற்றுக் கொள்ளும் போது, பலஸ்தீன தேசியக் கொடியைக் கொண்ட சால்வையை அணிந்து கொள்வதற்கு அனுமதி கேட்டதாகவும், அதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்றும் கூறினார். அதனைடுத்து, பட்டமளிப்பு முடிந்த கையோடு, அவர் - விழா மேடையில் ஏறி, பலஸ்தீனக் கொடியை சால்வையாக அணிந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

'கல்வி ரீதியாக ஒரு பட்டத்தை பெற்றுக் கொள்ளும் இந்த நாள் - எனக்கு மகிழ்ச்சிகரமானது என்றாலும் கூட - பலஸ்தீனத்தில் அப்பாவி மக்களும், குழந்தைகளும் இஸ்ரேல் தாக்குலில் கொல்லப்படுவதை நினைக்கையில், இந்த சந்தோசத்தை முழுவதுமாக அனுபவிக்க முடியவில்லை' என, இதன்போது யஸீர் அரபாத் கூறினார்.

எனவே, பலஸ்தீன மக்களுக்கான தனது ஆதரவையும், இஸ்ரேலுக்கான எதிர்ப்பையும் - இதுபோன்றதொரு பெரிய மேடையில் வெளிப்படுத்துவது பொருத்தமாக இருக்கும் என்பதற்காகவே, பலஸ்தீன் கொடியை தான் சால்வையாக அணிந்தார் எனவும் அவர் தெரிவித்தார்.

தனது இரண்டரை வயதில் தாயை இழந்த யஸீர் அரபாத், தன்னுடைய பெரியம்மா விடம் (தாயின் மூத்த சகோதரி) வளர்த்ததாகக் குறிப்பிட்டார். இள வயதில் தனது படிப்பை இடைநிறுத்த வேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்ட போது, தனது பெரியம்மாவின் பெரு முயற்சிகளால் படிப்பைத் தொடர்ந்து, இன்று பட்டம் ஒன்றைப் பெற்றுக் கொள்ள முடிந்ததாகக் கூறிய யசீர் அரபாத், இதன்போது தனது பெரியம்மாவை உணர்ச்சிகரமாக நினைவுகூர்ந்தார். தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வெளி வாரியாகப் படித்து, தனது கலைமாணிப்பட்டதை யஸீர் அரபாத் பெற்றுக் கொண்டார். தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா - சனி மற்றும் ஞாயிறு 06 அமர்வுகளாக மிகவும் சிறப பாய் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் சஹிலாவுக்கு சாய்ந்தமருதில் வரவேற்பு!





(யூ.கே. காலிதீன்)

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகப் பதவியேற்றுள்ள வைத்திய கலாநிதி சஹிலா இஸ்ஸதீனுக்கு சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட வரவேற்பு நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி வைத்தியசாலை ஏ.எல். எம்.அஜ்வத் தலைமையில் வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் டாக்டர் சனுஸ் காரியப்பர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் சுகாதார தகவல்கள் பிரிவின் பொறுப்பதிகாரி ஐ.எம்.முஜீப், சாய்ந்தமருது ஜ/ம்ஆப் பெரிய பள்ளிவாசலின் தலைவர் ஏ.ஹிபத்துல் ஹரீம், வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தின் பிரதித் தலைவர் எம்.எஸ்.எம். முபாறக், செயலாளர் எம்.ஐ.எம். சதாத் உட்பட வைத்தியசாலையின் ஊழியர்கள் மற்றும் அபிவிருத்திக் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்சஹிலா இஸ்ஸதீன் நினைவுச் சின்னம் வழங்கி, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து வைத்தியசாலையின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பாக சுகாதாரப் பணிப்பாளருடன் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது. (05)

# நிர்வாக உத்தியோகத்தர் முஷரப்பிற்கு பிரிவுபசாரம்



(வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் எம்.ஐ. முஷரப் தனது அறுபதாவது வயதில் ஓய்வுபெற்றதை அடுத்து அங்கு பிரிவுபசார நிகழ்ச்சி நடைபெற்றது.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா தலைமையில் வலயக்கல்விப் பணிமனையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அங்கு நிர்வாக உத்தியோகத்தரின் சேவைகள் பற்றி பலரும் பாராட்டி பேசினர்.

இறுதியில் அவருக்கு சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனை உத்தியோகத்தர்கள் பொன்னாடை போர்த்தி நினைவு பரிசுகளை வழங்கினார்கள்.

இறுதியில் நிர்வாக உத்தியோகத்தர் முஷரப் ஏற்புரை வழங்கினார்.

(05)

# திருப்பாடுகளின் நாடகம் பிரதி வழங்கும் நிகழ்வு

திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை சித்திரிக்கும் திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளாகிய நாளை (புதன்கிழமை) மாலை 5.00 மணிக்கு இல.17,மார்டீன் வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் 'கலைஞான சுரபி' தியான இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட மூத்த அருட்தந்தையர்களில் ஒருவரான அருட்தந்தை ம. றெஜி இராஜேஸ்வரன் அடிகள் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவதுடன், ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள கலைஞர்களுக்கான பிரதிகளையும் வழங்கி வைப்பார்.

பிரதி வழங்கும் வைபவத்தில் வழமையாக திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்கின்ற அனைத்துக் கலைஞர்களையும், புதிதாக இணைந்துகொள்ள விரும்புபவர்களையும் கலந்துகொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

இவ்வாண்டு திருப்பாடுகளின் நாடகம் மார்ச் மாதம் 21 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரையிலான நான்கு நாள்களுக்கு 'வேள்வித் திருமகன்' என்னும் பெயரில் மாலை 6.45 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் நீ.மரிய சேவியர் அடிகளாரால் இறுதியாக எழுதப்பட்ட 'வேள்வித் திருமகன்' திருப்பாடுகளின் நாடகம் முதன் முதலாக 2012 ஆம் ஆண்டிலும், அதனைத் தொடர்ந்து 2014 ஆம் 2016 ஆம் ஆண்டுகளிலும் மேடையேற்றப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றது. தற்போது எட்டு ஆண்டுகளின் பின் மீண்டும் மேடையேற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# மன்னாரில் பின்தங்கிய கிராம மக்களுக்கு வளர்ப்பு ஆடுகள்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

பின்தங்கிய கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு விவசாய அமைச்சால் முன்னெடுக்கப்படுகின்ற ஆடு வளர்ப்பு திட்டத்தின் மூலம் மன்னார் மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலகங்களை உள்ளடக்கியவாறு சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு பயனாளிக்கு மூன்று ஆடுகள் வீதம் மொத்தமாக மன்னார் மாவட்டத்தில் 120 பயனாளிகளுக்கான ஆடுகள் வழங்கும் வேலை திட்டத்தின் கீழ் மன்னார் நகர பிரதேச பிரிவிற்குப்பட்ட தெரிவு செய்யப்பட்ட 32 பயனாளிகளில் முதற்கட்டமாக 7 பயனாளிகளுக்கான வளர்ப்புக்கான ஆடுகள் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தானால் வழங்கி வைக்கப்பட்டது

மேலும் ஒரு தொகுதியாக 10 பயனாளிகளுக்கான 30 ஆடுகள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரனால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட விவசாய பணிப்பாளர் , கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

# இலவச குடிநீர் இணைப்புக்கள் கிண்ணியாவில் வழங்கி வைப்பு

(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தின்,கிண்ணியா பிரதேச செயலக பிரிவில் உள்ள வறுமைக் கோட்டியின் கீழ் வாழும் 100 குடும்பங்களுக்கு முஸ்லிம் எயிட் நிறுவனத்தால் இலவச குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 13 குடும்பங்களுக்கு இலவச குடிநீர் இணைப்பு நேற்று (திங்கட்கிழமை) கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.ஹனி அவர்களால் வழங்கி வைக்கப்பட்டது.

குடி நீரின் தேவையை பூர்த்தி செய்து சுத்தமான குடி நீரினை வழங்கும் நோக்கில் இத் திட்டம் நடை முறைப்படுத்தப்பட்டது.

பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த நீரிணைப்பு வழங்கும் நிகழ்வில் நிர்வாக கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், முஸ்லிம் எயிட் நிறுவன வெளிக் கள இணைப்பாளர் றமீஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# கிண்ணியா கல்வி வலயத்தில் இணைக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இடமாற்றம்

## திட்டமிட்ட செயற்பாடு என எம்.எம்.மஹ்தி குற்றச்சாட்டு

(ஹஸ்பர் ஏ.எச்)

கிண்ணியா கல்வி வலயப் பாடசாலைகளில் இணைப்புச் செய்யப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களை மாத்திரம் வீணாக திட்டமிட்டு பழிவாங்கி இடமாற்றம் செய்வதை ஏற்க முடியாது இதனை கண்டிக்கிறோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் மூதூர் தொகுதிக்கான கொள்கை பரப்புச் செயலாளரும் முன்னால் கிண்ணியா நகர சபை உறுப்பினருமான எம்.எம்.மஹ்தி தெரிவித்துள்ளார்.

கிண்ணியா விழிப்புணர்வு தகவல் மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துரைக்கையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

கிழக்கு மாகாணத்தில் மொத்தமாக 17 கல்வி வலயங்கள் காணப்படுகின்றன. இதில் திருகோணமலை மாவட்டத்தில் ஐந்து வலயங்கள் என காணப்படுகின்ற போதிலும் 2021 ஆம் ஆண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக பாடசாலைகளில் இணைப்புச் செய்யப்பட்டவர்களில் இருந்து மட்டக்களப்பு கல்குடா வலயத்துக்கு இடமாற்றம் செய்திருப்பது பாரிய திட்டமிட்டு செய்யப்பட்ட அப்பட்டமான இடமாற்றத்தை கண்டிக்கிறோம்.

கிண்ணியா வலயத்தில் 228 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை பூர்த்தி செய்யவே நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் நேரசூசி வழங்கப்பட்டு பாட விதானங்களில் நூறு வீத தேர்ச்சிகளை பெறுவதற்கு அளப்பெரிய ஒத்துழைப்பினையும் வழங்கியுள்ளார்கள் கிண்ணியாவின் கல்வி சமூகத்தின் வெற்றிக்கு இவர்களது ஒத்துழைப்பும் கிடைக்கப்பெற்றன இருந்த போதிலும் தற்போது 16 பெண் உத்தியோகத்தர்களும் 11ஆண் உத்தியோகத்தர்களும் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதை ஏற்க முடியாது. நாடு பொருளாதார கஷ்டங்களை அனுபவிப்பது போன்று இவர்களின் பொருளாதான சுமைகளும் அதிகரித்துள்ளன தங்களது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை தாயாக தந்தையாக இருந்து இங்கு இருந்தால் தான் திறம்பட கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். கிண்ணியா வலயத்தில் 360 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவி வருகின்றன. இங்கு சுமார் 27 ஆயிரத்து 500 மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் இருந்த போதிலும் கல்வி திணைக்களத்தின் புரிதலற்ற அப்பட்டமான தகவல்கள் இவ் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இடமாற்றத்துக்கு வழி சமைத்துள்ளது. ஏனைய வலயங்களில் தகவல்கள் கோரப்பட்ட போதிலும் அங்கு நில் அறிக்கை வழங்கப்பட்டிருப்பது போன்று கிண்ணியா வலயத்தில் மாத்திரம் அநீதி ஏற்பட்டிருப்பது வருத்தமளிக்கிறது.

எனவே கிழக்கு மாகாண ஆளுநர் இந்த இடமாற்றத்தை ரத்துச் செய்வதன் மூலம் கிண்ணியாவில் அவர்களை மீளவும் அதே பாடசாலையில் இணைப்புச் செய்வதாலும் சிறந்த கல்வி சமூகத்தை உருவாக்க முடியும் எனவும் நீதியை பெறுவதற்காக நீதிமன்றத்தை நாடுவதற்கான வழி வகைகளை அமைத்துக் கொடுக்கவும் செயற்படுகிறேன். இல்லாத பட்சத்தில் போராட்டத்தின் மூலமான வெற்றியை பெறுவதற்காக முயற்சிப்பேன் எனவும் மேலும் தெரிவிததார். (05)

# ட்ரோன் கமரா பறக்கவிட்டவர் தெல்லிப்பழையில் கைதானார்

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை பகுதியில் முறையான அனுமதிப்பத்திரம் இல்லாமல் ட்ரோன் கமரா பறக்கவிட்ட குற்றச்சாட்டில் ஒருவர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

தெல்லிப்பழை துர்காபுரம் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய சந்தேக நபரே தெல்லிப்பழை பொலிஸாரால் ட்ரோனுடன் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

## ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலய

# பழைய மாணவர் சங்க புதிய நிர்வாகத் தெரிவு

யாழ். ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் பாடசாலை அதிபர் க.சிவநேசன் தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாகத்தின் விவரம் வருமாறு:-

காப்பாளர்களாக அ.சா.அரியகுமார், ச.விஜயகுமார், வே.ஜெயபாலகிருஷ்ணன் ஆகியோரும், தலைவராக க.சிவநேசனும் (பாடசாலை அதிபர்), செயலாளராக வி.மன்மதகுமாரும்

பொருளாளராக திருமதி சு.நிலாந்தினியும் (பாடசாலை ஆசிரியை)

உப செயலாளராக திருமதி ற.அனுஷியாவும் நிர்வாக உறுப்பினர்களாக வே.சிவநேசன், செ.வேலுப்பிள்ளை, சி.சத்தியவரதன், ஆ.இளங்கோ, த.சாந்தநேசன் ஆகியோரும் தெரிவாகினர். (05)

# தொழில் வழிகாட்டல் விழிப்புணர்வு நிகழ்வு

## துறைநீலாவணையில்







(வி.ரி.சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி பிரிவின் ஒழுங்கமைப்பில், துறைநீலாவணை பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையில் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் தொழில் வழிகாட்டல் நிகழ்வு துறைநீலாவணை மகாவித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வின் வளவாளராக திருமதி சரண்யா லவபிரதன் கலந்துகொண்டதுடன் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர், பழைய மாணவர் சங்கத்தின் உறுப்பினர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.(05)

# அயலகத் தமிழர் மாநாட்டில் கலந்துகொண்டமைக்கு கிழக்கு ஆளுநருக்குத் தமிழக அரசு நன்றி பாராட்டு

(ஹஸ்பர் ஏ.எச்)

தமிழக முதல்வர் மு. க ஸ்டாலினுடைய ஏற்பாட்டில் தமிழகத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டிற்கான அயலக தமிழர் மாநாட்டில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும்,கிழக்கு மாகாண ஆளுநரருமான செந்தில் தொண்டமானுக்கு தமிழக அரசு நன்றி தெரிவித்துள்ளது.

புலம்பெயர் தமிழர்களின் கலை, கலாசாரத்தை எடுத்துரைத்து அயலக தமிழர் மாநாடு வெற்றியடைய வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றிகளைத் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

மேலும் அயலக தமிழர் மாநாட்டில் செந்தில் தொண்டமான் பங்கேற்று நிகழ்வை கௌரவப்படுத்தியமை மகிழ்ச்சி அளிப்பதாகவும், எதிர்கால நிகழ்வுகளுக்கும் தங்களின் ஒத்துழைப்பு மிக முக்கியமானது எனவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது. (05)

# சாய்ந்தமருது கடற்பரப்பில் நங்கூரமிடப்பட்ட இயந்திரப் படகு இரண்டாக உடைந்துள்ளது





(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது பிரதேசத்தில் படகு இறங்கு துறை இல்லாத காரணத்தால் கடற்பரப்பில் நங்கூரம் இடப்பட்டிருந்த கல்முனையைச் சேர்ந்த மீனவர் ஒருவருடைய ஆழ்கடல் இயந்திரப்படகு கடலில் வீசிய பலத்த காற்றாலும் அலையின் வேகத்தாலும் இரண்டாக உடைந்துள்ளது.

படகு இரண்டாக உடைந்த நிலையில் படகின் இயந்திரம் கடலில் மூழ்கியுள்ளது.

உடைந்த இயந்திர படகின் பாகங்களைக் கரைக்குக் கொண்டு வருவதில் பிரதேச மீனவர்கள் கனரக வாகனத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

இதே வேளை நூற்றுக்கும் அதிகமான ஆழ்கடல் இயந்திரப்படகுகள் தற்போதும் சாய்ந்தமருது கடற்பரப்பில் நங்கூரம் இடப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.02.2024இல் வெளியிடப்பெற்றது.